சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௪.] 1915ஆு அக்டோபர்மீ [பகுதி ௧௦.

## மைத்திராயணீ யோபநிஷத்து.

### இரண்டாம் பிரபாடகம். (தொடர்ச்சி)

ஈசன் எங்ஙனம் அம்சத்துடனிருப்பன் எனவினவ,எவன்மேலே கிளம்புகிறான் அவன் பிராணன், எவன் கீழே *போகிறான் அவன் அபானன், எவன் தூலமான அன்னதாதுவை அபானத்தால் வைத்து அணுவான †வன்னதர்துவை அங்கங்கடோறும் சேர்க்கின்றான் அவன் சமானன், எவன் அன்னபானங்களை விழுங்கவும் கக்கவும் செய்பவன் அவன் உதானன், எவனால்விருந்த நாடிகள் வியாபிக்கப்பட்டன அவன் வியானன்.

எவ்வித உபாம்சு அந்தர்யாமத்தை ‡ஜயிக்கின்றது, அந்தர்யாமம் உபாம்சுவை ஜயிக்கின்றது, இரண்டின் நடுவிலே உஷ்ண முண்டாகின்றது அவ்வுஷ்ணமே புருஷன் அப்புருஷனே அக்கினி வைசுவாநரன்.

---

* மேலேகீழே என்ற வியவகாரம் இதயத்தை யெல்லையாகவைத்து ஏற்பட்டன.

† அணு-சாரம்.

‡ உபாம்சு அந்தர்யாமம் இரண்டும் சோமயாகங்களில் சோமரசத்தை வைக்கும் பாத்திர விசேஷங்கள்.

இவனே வைசுவாநராக்கினியென வேறிடத்தும் சொல்லப்பட்டுள்ளது.

எவன் இந்தப் புருஷனுடைய இருதயத்திலிருக்கிறான், எவன் போஜனம் செய்யப்படும் வஸ்துக்களைப் பாகம் செய்கிறான், அவனே காதினைமூடிக்கொண்டால் *கேட்கப்படும் தொனியாவன், அவன் எப்போது வெளிகிளம்பப் பிரயத்நினம் செய்கிறானோ அப்போது இச்சத்தம் கேட்கப்படமாட்டாது.

அவ்வித பரமாத்துமா ஐந்தாகப் பிரித்துக்குகையில் வைக்கப்பட்டான், மனோமயன் பிராணத்தைச் சரீரமாயுடையவன், பிரகாசரூபன் சத்தியசங்கற்பன் ஆத்மா.

இருதயத்திலேயுள்ள (ஆத்மா) அகிருதார்த்தனாய்த் தன்னை நினைத்துத் தான் புசிக்கிறவனென்றும், இந்திரியாபிமானியென்றும் எண்ணுகிறான். ஐந்து கடிவாளங்களால் விஷயங்களைக்கிரகிக்கின்றான், இவனுக்குள்ள புத்தியாதி இந்திரியங்களே கடிவாளங்களாம், கர்மேந்திரியங்கள் குதிரைகள், சரீரம் இரதம், மனம்நியந்தா, †பிரகிருதியே சாட்டை, இவனால் பிரேரிக்கப்படுகிற இச்சரீரம்போலச் சஞ்சரிக்கிறது, மிருதனாய்ப்போகும் பட்சத்தில் இச்சரீரம் சேதனமாகத் தோன்றாது, இச்சரீரத்திற்கு அவனே பிரேரகன்.

ஆத்மா இச்சரீராவஸ்தையடைந்து நன்மை தீமையான கருமப்பயன்களாற் கட்டுப்பட்டுச் சரீரந்தோறும் சஞ்சரிக்கிறான், அவன் வியக்தனாதலானும் சூட்சுமனாதலானும், அதிருஸ்யனாதலானும், அக்கிராக்யனாதலானும், நிர்மமனாதலானும் ‡அவஸ்தைக் கடந்தவனே அகர்த்தாவாயுள்ளவன் கர்த்தாவைப்போலிருக்கிறான்.

அங்ஙனமுள்ள இவன் சுத்தன் ஸ்திரன் சலியாதவன் அலேபன் ||அவ்வியக்கிரன் ¶நிஸ்பிருகன் §பார்ப்பவனைப் போலிருப்பவன்தனது சரிதத்தைப் புசிப்பவன், குணமயமான பலத்தால் தன்னை மறைத்துக் கொண்டிருக்கின்றான்.

---

* காதைப் பொத்திக் கொள்ளுதலாவது சண்முகீ முத்திரையாலடைத்துக் கொள்ளுதல்,

† நியந்தா-சாரதி.

‡ நிர்மமன்-மமதை யில்லாதவன்.

|| அலேபன்-உபாதியில்லாதவன்.

¶ அவ்வியக்கிரன்-ஞானகனனாயுள்ளவன்.

§ நிஸ்பிருகன்-விருப்புவெறுப் பில்லாதன்.

## மூன்றாம் பிரபாடகம்.

ஓ பகவானே! இந்த ஆன்மாவின் மகிமையை நிரூபிக்கின்றார்களாயின் வேறொரு ஆன்மா யார்? எவன் நல்லதும் கெட்டது மானகருமபலன்களாற் கட்டுப்பட்டுச் சுத்த மசுத்துமான யோனிகளையடைந்து கீழுமேலுமான கதிகளைத் துவந்துவங்களால் அவமதிக்கப்பட்டு அடைகிறானென்றனர்.

வேறாகிய பூதாத்மாயிருக்கின்றான், அவன் நல்லதும் கெட்டது மானகன்மபலன்களால் கட்டுப்பட்டுச் சுத்த மசுத்துமான யோனிகளையடைந்து கீழுமேலுமான கதிகளை இரட்டைகளால் பீடிக்கப்பட்டவனா யடைந்து சுழல்கின்றான். ஐந்து தன்மாத்திரைகள் பூத சப்தத்தால் விவகரிப்படுகின்றன. ஐந்து மகாபூதங்கள் வேறுசொல்லப்படுகின்றன, அவைகளின் சமுதாய மெதுவோ அதுசரீரம்.

எவன் சரீரமென்று சொல்லப்பட்டானோ அவனே பூதாத்மா அவனுக்கோராத்மாவுண்டு, அவன் தாமரையின் தண்ணீரைப் போல உள்ளவன், அவன் பிரகிருதியின் குணங்களால் கட்டுண்டு தன்னிலை மாறி மூடனாயிருக்கிறான், மூடனானபடியால் ஆன்மாவினிடத்துள்ளவனும் பிரபுவும் பகவானுமாகிய பிரேரகனைக் காணவில்லை.

குணங்களால் தபித்துக்கொண்டு கலக்கமடைந்து அஸ்திரனாய்ச் சஞ்சலனாய் அலைபவனாய் ஆசையுள்ளவனாய் பிரவிருத்தி யடைந்து அபிமானியாய் நான் எனது இது என்று நினைத்து பட்சித்தானே தன்னைவலையால்த்தன்னைக்கட்டிக் கொள்வதுபோலக் கட்டிக்கொண்டு பலன்களா லாக்கிரமக்கப்பட்டுச் சுழல்கிறான்.

எவன் காத்தாவோ அவனது அபிமானமே பூதாத்துமா, காணங்களைக்கொண்டு உள்ளே புருஷனையுடைய சரீரமே பிரேரணஞ் செய்கின்றது. எங்ஙனம் இரும்பு குண்டானது நெருப்பில் காய்ந்து கர்த்தாக்களால் அடிக்கப்பட்டுப் பலவகையாகின்றதோ அங்ஙனமல்லவோ இப்பூதாத்துமா சரீரத்தால் வசப்படுத்தப்பட்டுக் குணங்களாலடிக்கப்பட்டுப் பலபோகங்களைப் பெறுகின்றான். இனி எது முக்குணசமுதாயமும் எண்பத்து நான்குலட்ச யோனிகளாய்ப் பரிணமித்ததுமான பூதகணமுள்ளதோ அதுவே பல போகங்களாகும், அவைகளாகிய இந்தக்குணங்கள் புருடனால் பிரேரிக்கப்பட்டுச் சக்கிரமானது மறுசக்கிரத்தால் பிரேரிக்கப்பட்டுச் சுழல்கின்றது, இரும்பு குண்டையடிக்கும்போது அதினிடமுள்ள அக்கினியடி படுவதில்லையே அப்படி புருஷனடி படுவதில்லை பூதாத்மாவுடன் கலந்திருத்தலினாலடிபடுகின்றது.

மணவழகு.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவபிரான் கருணையுஞ் சீவர்கள் கடமையும்.

தொகுதி 4, பக்கம் 202 தொடர்ச்சி.

இங்ஙனமின்றி யெல்லாஞ் சமஞ்சமமென்று கூறுவார் ஒன்றினு நிலைபெறாது தமக்குரிய ஆன்மலாபத்தை முடிவிலிழந்தவரே யாவர். சமயசாத்திர விசாரத்தால் தத்துவ நிலை யதிகாரநிலை முதலிய தாரதம்மியங்களைக் கண்டுகூறல் அவரவர் அன்புநிலைபடுதற்குப் போகமாதலானும், முன்னைய சமயாசாரியர்களெல்லாரும் அங்ஙனங்கூறிப் போந்தமையானும், அதுநிந்தையாகாது. நிந்தையாவது துரபிமானத்தால் உள்ளதை யில்லதாகவும், இல்லதையுள்ளதாகவுங் கூறிப்பழித்தலேயாம். "உள்ளேன் பிறதெய்வமுன்னை யல்லாதெங்களுத்தமனே" "கற்றறியேன் கலைஞானங் கசிந்துருகேனுயிடினு, மற்றறியேன் பிறதெய்வம்," என்னுந்திருவாக்குக்கள் நிந்தையின்றி விசேடவன் பினிலக்கணத்தை வெளிப்படுத்துதலுணர்க. ஆகவே, நாம் நம்பதியாகிய சிவபிரானிடத்து விசேடபக்தியாகிய உண்மையன்பு செய்தல் கடமையாம். இதரதெய்வங்களையும் உரியவாறு போற்றுதலைப்பற்றி விலக்கின்மையு முணர்தல்வேண்டும். அஃது அவரவர் மனநிலைக்கேற்ப மேற்கொள்ளத் தக்கதொன்றும்.

இனி, சைவர்களாகிய நாம் நம் இறைவனை முறைப்படி வழிபடுவதற்கு இன்றியமையாது மேற்கொள்ளத் தக்கது தீக்ஷையேயாகும். தீக்ஷையில்வழிப் பஞ்சாக்ஷர மகா மந்திர முதலியவற்றைச் செபித்தற்குக் கூடாமையானும், சரியை முதலிய நால்வகை நெறியொழுக்கம் பெறப்படாமையானும் அஃது இன்றியமையாததொன்றேயாம். தீக்ஷையாவது, ஆன்மாக்களிடத்துள்ள சிவசக்தியை

வெளிப்படவொட்டாது தடையாக மறைத்து நிற்கும் மலசக்தியைக் கெடுத்துச் சிவத்துவத்தைக் கொடுப்பதாகிய சிவசக்திக்கிரியை யாகும். இதனை,

> யயாநுக்ரதஹரூபிண்யாஶக்தேக்ரதிநிரோதிகா
> மலஸ்யக்ஷீயதேஶக்திஸ்ஶாதீட்சாஶாம்பவீக்கிர்யா
> தீட்சைவமோசயேநீவாஶாங்ஶிவதத்வம்தத்தாயஞ்ஞே

எனவரும் பௌஷ்கராகமத்தானுமுணர்க. இன்னும் இத்தீக்ஷையினாலேயே மோக்ஷமுதலிய வெல்லா நலன்களுஞ் சித்திக்கு மென்னுமுண்மையை வாயு சங்கிதை முதலிய புராணங்களானும், விரித்துக் கூறுஞ் சிவாகமங்களானு முணர்க. இத்தீக்ஷை பலதிறப்படும். அவற்றின் விளக்க விசேடங்களை யெல்லாம் ஆகமங்களுட்டெளிவாகவுணரலாம். சமய தீக்ஷைபெற்று இறைவன் உருவத் திருமேனியைப் புறத்தொழின் மாத்திரையான் வழிபடுதலாகிய சரியையும், விசேட தீக்ஷைபெற்று அருவுருவத் திருமேனியை புறத்தொழிலகத் தொழிலிரண்டானும் வழிபடுதலாகிய கிரியையும், அருவத்திருமேனியை நோக்கி யகத்தொழின் மாத்திரையான் வழிபடுதலாகிய யோகமும், நிருவாண தீக்ஷை பெற்று இம்மூன்றனையுங்கடந்த சச்சிதானந்தப் பிழம்பாகிய இறைவன் சொரூபத்தை வழிபடுதலாகிய ஞான நிலையும் ஆகிய இந்நால்வகை மார்க்கங்களுள், தந்தகுதிக்கேற்பவியன்றதொன்றை யநுட்டித்துவருதல் ஒவ்வோரான்மாக்களுக்கு முரியகடமையாகும். அறநூல்களிற் கூறப்பட்ட ஜீவதயை, கொல்லாமை, புலாலுண்ணாமை, கட்காம நீத்தன் முதலிய வுயர்ந்த ஒழுக்கங்களெல்லாம் ஈண்டுக்கூறிய சைவ நெறிக்கணடங்குமாதலின், வேறுக விரித்திலன். வைதிக குலத்திற் பிறந்தாருள்ளுஞ் சிலஈவின அறிவுடையோர், கிரிகைகள் கேவல மௌட்டியர்களுக்கேயன்றி யறிவுடையார்க்கில்லை யெனவும், அறிவுடையார் உண்மையுணர்ந்து அந்தக்கரணங்களை மாத்திரந்திருத்திக் கோடல் போதிய தெனவுங் கூறி நித்திய கன்மங்களைப் பொருட்படுத்தாது காலத்தை வறிதேகழிக்கின்றனர், அவரெல்லாம், கன்மாநுட்டானங்களாலன்றிச் சித்த சுத்தியுண்டாகாதென்று அநுபவ ஞானிகளாகிய நம்பண்டையோர் கூறியாவாறே யொழுகிய வுண்மையை யொருசிறிது முணர்ந்திலர். கீதையிற் கண்ணபிரான், தத்துவ ஞானியுங்கன்மத்தைவிடல் தவறெனவும், மேற்கோடலின்றியமையாத தொன்றெனவுந் தடை விடைகளா

லருச்சுனற் குபதேசித்ததையு முணர்ந்திலர். உண்மை ஞானி யொருவர் எல்லாப்பதங்களையும் ஒருவிச்சுத்த ஞானப்பிரகாசத் தியைந்திருக்குங்காற் கன்மங்க ளவரைத் தாக்காமற்றாமே யொழியும். அந்நிலையைப் பற்றி யீண்டுச் சங்கித்தலினைய பின்று கன்மந்தானே யொழியப் பெற்றவொரு மகாஞானியை நோக்கி யொருவன் அடிகாள், தேவரீர் சத்தியோபாசனை செய்யாதிருத்தலென்னை? என்று வினாவினாக, அவர்,

> ம்ருதாமோஹமயீமாதாஜாதோபோதமயஸ்ஸுதா
> ஸூதகத்வயஸம்ப்ராப்தௌகதிம்ஸந்த்யாமுபாஸ்மஹே

(இதன் மொழி பெயர்ப்பு)

> அஞ்ஞானத் தாய்மரண மானா ளஃதொன்றோ
> மெய்ஞ்ஞானக் கான்முளையு மேவினான்—இஞ்ஞாலர்
> தன்னின் மரண சனனவிரு சூதகத்தேன்
> உன்னலெங்ஙன் சந்திசெய லோர்."

என்று விடை கூறினார். அஃதாவது: "அஞ்ஞான வுருவமாகிய தாயிறந்தாள், அறிவுருவமாகிய குழந்தை பிறந்தது; இவ்விருவகை யாசௌசத்தையுமுடையனா யிருக்குங்கால் எவ்வாறு யான் சந்தியோபாசனை செய்வல்" என்பதாம். ஆதலிற் கண்ணப்பர் முதலிய முறுகிய அன்புடையார் செயலை விதியாகக்கொண்டு அத்தகுதியில்லாத நாமும் மாம்ஸ நிவேதனத்தை யிறைவனுக்குச் செய்தல் பொருந்துமா? அவர் இறைவன் கண்ணிற் புண்ணீர் வார்தல் கண்டு வருந்தியதற்கு மாற்றாகத் தங்கண்ணைப் பறித்து வைத்து மகிழ்ந்தாரன்றே; அத்துணிவு நமக்கும் வரினன்றே அவர் செயலை நாமுங் கோடலமையும்?

அன்பர்களே!

இக்குதர்க்க நெறியை யொழித்து நமக்கு இறைவன் அருளிய வேதாகமங்களில் விதிக்கப்பட்ட செயல்களை யியன்ற வரை விடாது செய்மின்கள்; புலாலுண்ணல் முதலியவற்றிற்கு முதிர்ந்த அன்புடைச் சிவச்செயலாளராகிய அடியார்களை யுதாரணங்காட்டிப் புரைபடாதீர்கள்; சமயாசாரமாகிய நித்தியகன்மங்களை விடாது செய்யமுந்துமின்; ஒவ்வொரொழுக்கங்களையுஞ் சொல்லளவிற் சுருக்கியுஞ் செயலளவிற் பெருக்கியுங் காட்டுமின்கள்; நம் சமயக்கடவுளைச் சிவ

லிங்காதி திருமேனிகளிடத்தும், சிவனடியாரிடத்து மிருப்பதாகக் கண்டு விசேட அன்பைச் செய்மின்கள்; பிற சமயங்களும் இறைவனருளிருந்தவாறு ஆன்ம பக்குவ நோக்கி வெளிப்பட்டன வென்னு முண்மையுணர்ந்து அவற்றை யிகழ்மின்கள்; இளமைப்பருவம் காமாதிகளை யநுபவித்தற்கென்றே கருதிக்கழிக்காது நம் பெருமானை வழிபட்டுய்தற்கு மிகவேற்றதொரு பருவ மென்றெண்ணுமின்கள்; ஆலய வழிபாட்டையும் விக்கிரகாராதனைத்தையும் இயன்றவரை யிடைவிடாது செய்ய விரும்புமின்கள்; உரியகருவி நூல்களையும், அவற்றின் பயனாகச் சமய நூல்களையும் நடுநிலையுடன் ஆராய்மின்கள்; தாங்கொண்டதே பொருளெனக் கடைப்பிடியாது தம்மினுந்தாழ்வார் வாயுண்மை வருமாயின் அதனை மகிழ்ந்தேற்றுக் கொண்மின்கள்; நூல்களிற் கண்டவற்றை யொழுக்கத்திற் காட்டற்கன்றிக் காலம் விளைத்தற்குபயோகமென் றெண்ணுதீர்கள்; நம் சமயத்தையும், பாஷையையும் பிற சமயத்தார்க்கும் பிறபாஷையாளர்க்கும் வருத்தமுண்டாமாறின்றிப் பேணுமுற்படுமின்கள்; பிறர் நம்சமயம் பாஷைகளை யறியாமையான் இகழின் அவர்மனம் வருந்தாது விஷயங்களுக்கு மாத்திரந்தக்கவாறு மறுமொழிதந்து அவரைத் திருத்துமின்கள்; பின்னுந்திருந்தாராயின் அவரறியாமைக் கிரங்கியஃதொழிய நங்கடவுளை வேண்டுமின்கள்; சிவபிரான், விரும்பிக் கருணைபாலித்தற் குரியதாக ஜீவதயையென்னுந் திவ்யாமிர்தத்தை முதலில் நம் நெஞ்சக்கலத்திற் கொண்மின்கள்; நண்பர்களே! இவையெல்லாம் சீவர்களாகிய நங்கடமைகளேயாம். இத்துணைக் கடமைகளுண் மிகமுக்கியமான கடமையொன்று சிவபிரானை நோக்கச்சீவர்களுக்குண்டு. அதனையும் ஈண்டுக்கூறுவேன்.

## (கூ) ஓரின்றியமையாக்கடமை.

அஃதாவது, இறைவனைநோக்க ஆன்மா ஒருவித சுதந்தரமுமின்றிப் பரதந்திரனாதலின், ஆணவமலத்தாற் பிணிப்புண்டு கிடக்கும் பெத்தகாலத்தும், தநுகரணங்களைப் பெற்றுச் சிறிது அறிவு விளக்கமுற்று உபாசனாதிகளைச் செய்யு மத்தியகாலத்தும், மலசக்தியறவே யொழியப்பெற்றுச் சிவத்துவமெய்திப் பேரின்பநுகரும் முக்திகாலத்தும் தன்பாலிடைவிடாதமைந்து கிடக்கும் அடிமைத் தன்மையேயாம். அடிமையாவது "கண்ட விவையல்லேனா னென்றகன்று காணாக் கழிபரமு நானல்லேனெனக் கருதிக்கசிந்த, தொண்டு" என்றபடி காணப்படும் பாசகாரியப் பொருள்களும் மேலாகிய பதிப்பொருளும்

யானல்லேனென்று கருதியவழி முன்போல முனைத்தலின்றி யோங்குணர்வி னுள்ளடங்கி நிற்றலாம். இவ்வடிமையின் முக்கிய விலக்கணமாகக் கருதவேண்டியது. ஆண்டானாகிய சிவபிரான், ஒப்பாரு மிக்காருமின்றி யாவர்க்குமேலாந் தலைவரெனவும் அடிமையாகிய யான், என்னின் ஒப்பானதுங் கீழானதுமாகிய பொருளொன்று மின்றி யானேமிகக் கீழானவனெனவும் உள்ளவாறுணர்ந் தொழுகலேயாம். இதுகருதியே, "யாவர்க்குமேலா மளவிலாச் சீருடையான், யாவர்க்குங் கீழாமடியேனை" என்றார் ஸ்ரீ மணிவாசகப் பெருமானும். நம் சமயக்கொள்கை பலவற்றுண் மிக முக்கியமானது மிதுவேயாம். அதனாலன்றே, "தாழ்வெனுந்தன்மையோடு சைவமாஞ்சமயஞ்சாரு. மூழ் பெறலரிது" என்றுகூறும் சிவஞானசித்தியும்? இத்தொண்டு, தாதமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சன்மார்க்கமாகிய நால்வகை யொழுக்கத்தினும் ஆன்மாவைவிட்டு நீங்காதசொன்றும். "எவ்விடத்து மிறையடியை" யெனவும், "தொழும் பாகுமங்கு எனவுங் கூறியபடி. முக்தியினும் இவ்வான்மா அடிமையே யாமெனின், வேறிதன் மாட்சியை யெங்ஙனங்கூறுவேன்! உள்ளவாறு ஓரான்மா இறைவனுக்கு யான் என்றும் அடிமையே யென்றுணர்ந்து முனைப்பின்று யொழுகுமாயின் முக்தி யின்பமாகிய பயனைச் சிவபிரான் தாமேதருவர். முக்தியை விரும்புதலும் அடிமை யிலக்கணத்துக்குக் குற்றமாமென்றால், வேறு பிரதிப் பிரயோசனங் கருதல் கூடாதென்பதைப் பற்றிக் கூறுவன் மிகையே. முக்தியென்பது எல்லாவற்றையும் விடுதலன்றே? அவ் வேண்டாமையை வேண்ட லவசியமென்று நூல்கள் கூறவும், அதனை விரும்புதலுங் குற்றமென்ப தெங்ஙனம் பொருந்துமெனின்; ஆன்மா தன்கடமை யின்னதென்றறிந்து மேற்கொள்ளின், இறைவனுந் தன் கடமையைச் செய்வன் என்பது தேற்றமன்றே? அஃதுணர்ந்தும்,சிறிதுஞ் சுதந்தரமில்லாத இவன்எற்கு இன்னது வேண்டுமென்று விரும்புதலுந் தவறேயாம். இவ்வுண்மையை, "மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன்கழற்கே புகுமாறும், அண்ணாவெண்ணக் கடவேனோ வடிமைசால வழகுடைத்தே" என்னுந் திருவாக்கானு முணர்க. அஃதாவது, யான் அடிமையென் றுணர்ந்தபின் நின்னை வழிபடுதலே யன்றி யிவ்வுடல் கழியுமாற்றையு நின்றிருவடிப் பேறுபெறும் வழியையும், யான் எண்ணுதற்குரியனோ; அங்ஙனம் எண்ணுவேனாயின் என் அடிமையிருந்தவாறு மிக வழகிது என்பதாம். "சார்புணர்ந்து சார்பு கெட வொழுகின்" என்றபடி தாதமார்க்க முதன்மூன்று மார்க்கத்

தினுமொழுகுவோர் முக்தியின்பத்தில் விருப்புற்று மேன்மேற்செல்லுவர். நான்காவதாகிய சன்மார்க்கத் தொழுகுவோர் அவ்விருப்பமுமின்றித் தங்கடனிது வென வுணர்ந்து சிறிதுமுனைத்தலின்றி யடங்கி நிற்பின் சிவபிரான், தங்கடனாகிய பேரின்பளித்தலை விரைந்து செய்வர்.

ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகளும் இவ்வுண்மை யடிமையாரைக் கூறுங்கால்,

> "கேடு மாக்கமுங் கெட்ட திருவினர்
> ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்
> கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி
> வீடும் வேண்டா விறலின் விளங்கினர்"

என்று பாராட்டி யிருக்கின்றனர். இப்பாசுரத்தின் அருமையை யென்னென்பேன்! இத்திருத் தொண்டின் மாட்சியைப் பற்றித் தனியே யொரு வியாசமெழுதி வெளிப்படுத்தக் கருதியுளேனாதலினீண்டு விரித்திலன். முடிவாகக் கூறுமிடத்து இவ்வடிமையே ஆன்மா பயன் குறியாது மேற்கொள்ள வேண்டுவதொன்றென்பது இவ்வாராய்ச்சியால் விளக்கமாம்.

## (கo) இதன் பயன்.

இனி, இவ்வின்றியமையாக் கடமையாகிய அடிமையின் பயனைப்பற்றிச் சிறிது கூறுவேன். இதன் பயன் வீட்டின்பமேயென்பது முன்னர்ப் பெறப்பட்டதாயினும், இடைக்கணுண்டாம்பயன்களுமுள. ஆன்மா, எல்லாம் அவன் செயலேயன்றித் தன் செயலன்றென்றுணர்ந்து அருள்வழிநிற்பின், அதனாற் செய்யப்படுங் கன்மங்கள் அதனைச்சாரா. கன்மங்கள் பெத்தகாலத்து நான் செய்கின்றேனென்று கருதுவதால் ஆன்மாவைத்தாக்கும். முக்திகாலத்து யான் எனதென்னுமொருவகைப்பற்றுமின்றி யெல்லாமவன் செயலேயென்றுணர்ந்து அருள்வழி நிற்றலால் அக்காலத்துச் செய்யப்படுங்கன்மங்கள் அவ்வான்மாவைத்தாக்கா. பிராரத்த வினையநுபவித்தே தீரவேண்டுமெனினும், அஃது உடலூழாய்க்கழியுமன்றியுயிர்க்கு இன்பதுன்பங்களைச் செய்யாதென்பதாம். இவ்வுண்மையை, "நாமல்ல விந்திரிய நம்வழியினல்லவழி; நாமல்ல நாமுமரனுடைமை-யாமென்னின், எத்தனுவினின்று மிறைபணியார்க் கில்லைவினை, முற்செய்வினை யுந்தருவான்

முன்'' என்னுமெய்கண்டார் திருவாக்கானுணர்க. இதனால் எல்லாம் அவன் செயலென்றிருத்தன் மிக நலமென்று போதாலான்; தாம் செய்யுந்தீவினைகளுக்கும் இதனையே பிரமாணமாகக் காட்ட முற்படலாமாலெனில்; நன்று நன்று! எப்பொருளையுஞ் சிவமயமாகக் கண்டு தானொரு முதலென்பதின்றி யவனே தானேயாகிய வந்நிலையினிற்கும் முத்தனுக்கும், கண்டபொருளெலாமின்பஞ்செய்வனவென்றும், அவை யெனக்கெனக்கென்றும், யானே நுகருமுதலென்றுங் கருதிமலவாய்ப் பட்டுழலும் பெத்தனுக்கும் எத்துணை வேறுபாடுள தென்பதையுற்று நோக்குவார்க்கு உண்மைபுலனும். இதனால் முடிவுவரை பெரும் பயனைச் செய்வது, இத்திருத்தொண்டேயென்று அதன் மாட்சியுணர்ந்து அவ்வொழுக்கத்தை மேற்கொள்ளுதலே நங்கடமையாமென்பதும், விதி விலக்கைக் கடந்து நிற்றல் நம்மனோர்க்குப் பொருந்தாதென்பதும் விளக்கமாம்.

## என் அன்புள்ள சகோதரர்களே!

இத்திருத்தொண்டையியன்ற வரை செய்தலே சீவர்களின் முக்கியகடமையென்றுணர்ந்து நம்பெருமானிடத்து எஞ்ஞான்றும் அன்புபணிபூண்டு ஒழுகுமின்கள்; பயன் செய்வது அவர்கடமையென்பதை நிச்சயமாக நம்புமின்கள்; திருத்தொண்டு புரிவார் யாவரும் நம் உரிமைத்தமரென்பதையுள்ள வாறுணர்மின்கள்; சிவபிரானாகிய பரமபிதாவினது பேரானந்தப் பெருஞ்செல்வத்தைப் பெருதற்குரிய மக்கள் நாமே யென்றுணர்ந்து பெற்று இன்புறு மின்கள்; என் புன்சொற்களிற் பொதுளிய பிழைகளை யென்னறிவின் சிறுமை கருதிப்பொறுத்துக் கொண்மின்கள்.

மு. கதிரேசன்,
மகிபாலன்பட்டி.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பக்தி.

பக்தி? இது பங்கு, சேவிக்குதல், பக்தியோகஞ்செய்தல், கருத்து எனப்பல பொருள்படினும், ஈண்டுக்கருத்து என்பதையே பொருளாகக்கொண்டு ஆராய்வோம். இனிக்கருத்து என்பது எண்ணம் எனப்பொருள் படுதலால் நாம்எதனிடத்தேநம் எண்ணத்தைச் செலுத்துகின்றோமோ அதுவே பக்தியென்று அறிகின்றோம். ஆயினும் இக்கருத்து எதனிடத்தேயும் செல்லுவதேயாயினும் சிறப்பாக ஐங்குரவராய அரசன், தந்தை, தமையன், உபாத்தியாயன், குரு ஆகிய ஐவரிடத்துச் செல்லும் கருத்தாகிய எண்ணமே பக்தியாம். இவ் ஐங்குரவருள்ளும் ஞானாசாரியனாகிய குருவினிடத்துச் செலுத்தும் பக்தியே வீட்டிற்கோர் சிறந்த வித்தாகும். அது எவ்வாறெனின் ஞானாசாரியனே எல்லா மாகின்றானென்று மேலோர் பணித்துள்ளார்களாகையால் அவனிடத்துப் பக்திசெலுத்துவதே பரகதியடைவதற்குப் பரமோபாயமாகும். இது கருதியே,

"குரவனே யயனரி குரவனே சிவன்
குரவனே தந்தைதாய் குரவனேயெலாம்
குரவனே யென்றுநூற் கூறுமுண்மையைக்
குரவனே யென்னிடையின்று காட்டினாய்"

எனக் கூறிய தாகும்.

ஆதலால் ஐங்குரவர் ஆணை மறவாதொழுகும் நாம் இருமுது குரவராகிய தாய்தந்தையர் நம்மாட்டுச்செய்த நற்செயல்களையெண்ணி அவர்மாட்டு நீங்காததோர் பக்தியைச்செலுத்தி அவர் ஆணையின்வழி நின்று பின்னர் போதகாசிரியனாகிய குரவனை யடுத்து ஐயந்திரிபு அறப்பன்னூல் கற்று அவனுக்குப் பக்திசெலுத்தி ஞானாசாரியனாகிய குருவைவணுகி அவன் திருநோக்கைப் பெற்று அனலிடைப்பட்ட மெழுகெனவுருகித் தன்வசமழிந்து அவன் வசமாகி அவன் பரிசத்தையும் திகழும் வாக்கையும்பெற்று அனலிற்பட்ட செம்பானது உரு

கிப் பரிசவேதியினால் களிம்பு நீங்கிப் பத்துமாற்றுத் தங்கமாவது போல் அவன் கொளுத்தும் ஞானஅனலால் உருகி, அநாதியே ஆன்மாவைப்பற்றியுள்ள ஆணவமலத்தடிப்பாகிய காளிதம் ஒடுங்கிப் பக்குவராகி அவன் பதமலரடியில் பக்திசெலுத்துதல் வேண்டும். அவ்விதம் பக்தி செலுத்துவோமாயின் அவன் திருவாக்கில் எழுந்ததோர் ஒப்பரிய சொல்

"அப்பனீ யம்மைநீ யன்புடைய மாமனும்
மாமியுநீ
ஒப்பரிய மாதரும் ஒண்பொருளுநீ ஒருகுலமும்
சுற்றமும் ஓருருநீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ
துணையா யென்னுள்ளம் துறப்பிப்பாய்நீ
இப்பொன்னீ இம்மணிநீ இம்முத்துநீ
யேறூர்ந்த செல்வ னீயே."

என்றபடி எல்லாமாயுள்ள இறைவனாகிய சிவபெருமான் திருவடியில் கருத்துச் செல்ல ஏவும். அவன் திருவடியிற்கருத்துச் செல்லுதலும் உலகிற்காணப்படும் மண் பெண் பொன்னாகிய மூன்றனையும் மறந்து வீட்டின்கண் ஆசையுண்டாகிச் சரியை முதலாகச் சொல்லப்பட்ட நான்கினுள் சரியையிற்சென்று எங்குமுள்ள பஞ்சுடராய சிவபெருமான், அவனைவணங்கத்தந்த தலையால் அவன் திருவடியை வணங்கி கேட்பதற்களித்த செவியால் அவன் திருப்புகழைக் கேட்டு,வாய்மை கூற அருளியவாயால் அவன்தோத்திரங்களைப் பாடிக் கரங்களோரிரண்டும் கொண்டு அவன் திருவடியிற் பலமலர்சிந்திக் காலிரண்டும் கொண்டு அவன் திருக்கோயிலைப் பலமுறை வலம்வந்து, அவன் திருவருளால் அளவிலாது ஒடுகின்ற பக்தியால்கைகொட்டிப் பதம்பெயர்த்தாட நேரும். இவ்விதம் நித்தமும் நாம் பக்தி செலுத்துவோமாயின் யார்க்கும் தந்தையாய சிவபெருமான் நம் பக்தியாகிய வலையில் சிக்கிக்கொள்வதில் சிறிதும் ஐயமின்றாம். இப்பெரியதோர் தகுதியை நாம் அறியவே வாதவூரடிகளாகிய மணிவாசகப் பெருந்தகையும் "பத்திவலையிற் படுவோன்காண்க" எனப்பரிந்து ஓதினர். இம்முறை பற்றி ஒழுகாது எடுத்த யாக்கையின் அரியபயனை இழந்துளரிவாய்ச் செல்கின்ற பேதையர்பால் பரிவுற்றே வாகீசப் பெருந்தகையாகிய திருநாவுக்கரையரும்,

"பூக்கைக்கொண்டரன் பொன்னடிபோற்றிலார்
நாக்கைக்கொண்டானுமம் நவிற்றிலார்
யாக்கைக்கேயிரை தேடியலமந்து
காக்கைக்கேயிரை யாகிக்கழிவரே"

எனப்புத்தி போதித்தனர் என்க.

அன்றியும் நான்முகக்கடவுளாகிய நாயனாரும் இக்கருத்தொன்றுபற்றியே "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாடொழாரெனின்" எனக்கடவுள் வாழ்த்திற்கசிந்து கூறினர். ஆதலால் வானத்தில் தோன்றும் வில்லைப்போற்றோன்றி மறையும் இவ்யாக்கையை யாப்புடையதாகக் கருதாது உயிரெனும் பாத்தியில் உணர்வெனும் நீர்ப்பாய்ச்சி உள்ளமாகிய கிழியில் (படத்தில்) அவன் திருவுருவத்தை உருப்பெற வெழுதி அதை விடாது உற்றுநோக்கி உடல்புளகித்து அவனைப் பக்திசெய்வதிலும் வேறுபயன் யாதுளது.

அன்றியும் ஆன்மா சார்போதனாக வுள்ளானாகலால் சிவபெருமான் திருவடியில் பக்திசெலுத்த நம் கருத்தைச் செலுத்தாவிடின் பயனொன்று மில்லாது முடியும். அது அன்றியும் இப்பிறவியில் மாத்திரம் அல்லாமல் எப்பிறவியை யடைந்த காலத்தும் சிவபெருமான் திருவடியில் பக்தி செலுத்துவதே போந்த பொருள் என்று அறிவதற்கே

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியாவுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தரல் வேண்டும் இவ்வையகத்தே" எனச்
சமயாசாரிய சுவாமிகளும்

"வேண்டுவதொன்று தமியனெப்பிறப்பும் வெந்தழல்நரகிடைவிழினும்
காண்டரு சிறப்பின ரம்பையர் சூழக்கற்பகநீழல் வைகிடினும்
தூண்டரு சுடரே களாநிழலமர்ந்த சோதியே கருவைநாயகனே
ஆண்டகாய் நினதுதிருவடிக்கமலத்தன் பெனுமழிவிலாப் பொருளே"

என அரசர் பெருந்தகையாகிய அதிவீரராம பாண்டியரும் அருள் செய்தனர். அன்றியும் எறும்பு முதலாக யானை கடையியாக உள்ள எல்லா ஆன்மாக்களுக்கும் சிவபாஞ்சுடரிடம் பக்தி செலுத்தியே பரகதியடைந்ததாகப் பத்துப் புராணங்களிற் பரக்கக்காண்கின்றோம். இப்பக்தியொன்றொழிய மற்றைய தீர்த்தங்களிற் றோய்தலும் திரை

கடலாடுதலும் திவ்யயாத்திரை செய்தலும் கனலில் நிற்பதும் ஜலத்தில் நடப்பதும் ஆகிய சித்திகளும் வீட்டு நெறியையடை விப்பதற்கு வழியாகாவென நாம் அறிகின்றோம். இதனைப்,

"பரவை யாடினும் நதிகளாடினும் படியெல்லாம் நடந்து
அடிகள் தேயினும்

குரவாராயினும் கனலினூடுநின்ற தன்கொதிபொறுக்கினும்
கதிகிடைக்குமோ"

என்று மேலோர்வாக்கே நிலைநிறுத்தும்.

இவ்விதம் பக்தி செய்தவர்களில் ஆசாரிய சுவாமிகள் ஒருவரிடம் பக்தி செய்து பரகதியடைந்தநம் பெருமானாகிய அப்பூதியடிகளும் சிவலிங்கப் பெருமானிடத்துப் பக்தி செலுத்தித் தலையீற்றுப் பசு தன கன்றைவிட்டுப் பிரிய வெண்ணாதகைப்போல் இரவு பகல் இறைவனைவிட்டுப் பிரியாது தன்கண் இடந்து அப்பி ஆறுதினங்களில் முத்தியடைந்த நம் தெய்வமாகிய கண்ணப்பதேவரையும் எடுத்துக் காட்டலே பொருந்தும் என எண்ணுகின்றேன். இப்பேரருளாளர் இருவரையும் புகழ்ந்து பேசிய,

"உற்றானலன்ற வந்தீயினின் றானலனூண்புனலா
அற்றானலனுகர் வுந்திருநாவுக் கரசெனுமோர்
சொற்றானெழுதியும் கூறியுமே யென்றுந்துன்பில்பதம்
பெற்றானொரு நம்பியப் பூதியென்னும் பெருந்தகையே"

"நிலத்திற்றிகழ் திருக்காளத்தியார் திருநெற்றியின்மே
லலத்திற்பொழிதரு கண்ணிற் குருதிகண்டுண்ணடுங்கி
வலத்திற் கடுங்கணையாற்றன் மலர்க்கண்ணிடந்தப்பினார்
குலத்திற்கிராதனங் கண்ணப்பனாமென்று கூறுவபே"

என்னுந்திருச்செய்யுள்களே விளக்கும்.

ஆதலால் பன்றிக்குட்டிகளுக்கும் பரிந்து முலையூட்டிய பசுபதியாகிய பரமன் திருவடியிற் பக்தி செலுத்தி நாம் எடுத்த யாக்கையாலாய பயனை எய்துவோமாக சுபம்.

கி. குப்புச்சாமி,
(களந்தைகிழான்)

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவத்தியானம்.

உலகத்திற் றோன்றிய உயிர்களெல்லாம் இன்பத்தையே விரும்பும். அதிலும் சின்னாளினொழிவதாகிய சிற்றின்ப போகாதிகளை யொழித்து என்றும் அழியாத பேரின்பத்தையே விரும்புவது அறிவறிந்த மக்கள் கடனாம். ஆகவே காலவரையறைக்குட்பட்டொழிவதாகிய சிற்றின்பம்யாது? காலவரையறைகடந்துஎன்றும் நிலைத்துள்ள பேரின்பம் யாது? என விசாரிக்கப்புகின்; பூவுலகத்து அரசபதவியும், பிரமாதி தேவபதவிகளும் அவ்வவற்றிற்குரிய காலங்கழிந்தவுடன் ஒழிந்து விடுதலால் அழிதற்றன்மையன சிற்றின்பங்களே யாகும். இங்ஙனம் காலத்தின் அளவுக்குட்படாததும், என்றும் மாறாததும் ஆகிய மோக்ஷசாம்ப ராச்சியமான நிரதிசயாநந்தமொன்றே பேரின்பமெனப்பெறும். இத்தகைய பேரின்ப நிலையே தத்துவ நூலுணர்ந்த வித்தகர்களாகிய மெய்ஞ்ஞானிகள் யாவராலும்விரும்பப்படும் பெரும்பேறாம். பெறுதற்கரிய பெரும்பேறாகிய இதனை அடைதற்குச்செய்யும் உபாயமே மேற்குறித்த சிவத்தியான மென்றுணர்க. சிவத்தியானம் என்றால் சிவபிரானைத் தியானித்தல் என்று பொருள்தரும்.

மனம், வாக்கு, காயம் என்னுந் திரிகரணங்களின் மூலமாகவே எல்லாச் செயல்களும் நிகழ்வனவாம். இம்மூன்றனுள்ளும் காயத்தின் வழிப்படுஞ் செயலுக்கும், வாக்கின் வழிப்படுஞ்சொல்லுக்கும் மூலமாகநிற்பது மனத்தின் செயலாகிய நினைப்பேயென்பதும்; மனத்தில் நினைப்புத்தோன்றிய பின்னரே சொல்லுதலுஞ்செய்தலும் நிகழ்வனவல்லது மனம் ஒன்றை நினையாதபோது சொல்லுதலும் செய்தலும் நிகழாவென்பதும் யாவரும் அறிந்தனவே. ஆதலின் திரிகரணசுத்திவேண்டுமாயின் முதலில் மனமொன்றை மட்டுஞ் சுத்தப்படுத்திக் கோடலேசாலும். மனச்சுத்தி வந்தவுடன் ஏனைய இரண்டுந் தாமே வரும். கற்றுக்கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிஷ்டாபரராக இருந்த பெரியோர் பலரும் மனத்தின் தன்மையை நன் குணர்ந்தமை

யாலன்றோ அம்மனத்தை அடக்கவேண்டுமெனவும், மனம் அடங்காவழி நன்மையடைய முடியாதெனவும், மனம் ஒன்றைமட்டுந் தன் வசப்படுத்திக்கொண்டால் உடனே மோக்ஷவீடு சித்திப்பது நிச்சயமெனவும், மனத்தைச் சீர்ப்படுத்த முடியாமல் அது போனவழியே விட்டுவிட்டால் மீளா நரகிற்கே ஆளாகவேண்டுமெனவுங் கூறுவராயினர்? மனமானது எதனிடத்துப்பற்று வைத்ததோ அதனிடத்து முற்றும் ஈடுபட்டு அதன்மயமாகி விடும். தான் நன்மையானதொன்றைச் சிந்திப்பின் அச்சிந்தனை முதிர்ச்சியால் எல்லாம் நன்மையாகவே காணும். தீமையானதொன்றைச் சிந்திப்பின் எல்லாந்தீமையாகவே காணும். ஒருவன் ஒரு புலியைக்கண்டு மனம் பதறி மிக்க பயங்கொண்டு வரின் அவன் கண்ணுக்கு எதிர்ப்பட்டன வெல்லாம்புலியாகவே தோன்றும். இங்ஙனம் மனத்தின் நினைப்புவலியால் தோன்றும் உருவை உருவெளித் தோற்றம் என்பர். சீதையின் வடிவழகைச் சூர்ப்பநகை சொல்லக்கேட்டு ஆசைமேலீட்டால் அச்சீதையின் நினைவைத் தவிர வேறெல்லாம் மறந்த இராவணன் எங்கே பார்த்தாலும் தன் கண்களுக்குச் சீதையின் வடிவமே தோன்ற அதைக்கண்டு ஆச்சரியமடைந்து தங்கையாகிய சூர்ப்பநகையை வரவழைத்து "ஏ தங்காய்! இவள்தானா நீ கூறிய சீதை" எனக்கேட்டான். இராமனது வடிவழகிலீடுபட்டு ஆசைமீறி எல்லாம் இராமனின் திருவுருவாகவே கண்டு நிற்குஞ் சூர்ப்பநகை தான் நிற்கும் இடமும் தமையன் கேட்பதும் மறந்து "இவன் தான் இராமன்" என்று விடை பகர்ந்தனள். அதுகேட்ட இராவணன் வியப்பெய்தி நான் கண்டது பெண்ணுருவமாக நீ ஆணுருவென்று கூறுவதென்னையோ? என வினவ "அண்ணா! தாங்கள் கண்ட உருவம் சீதையன்று. இங்ஙனந்தோன்றுவது தங்கள் ஆசைப்பெருக்கத்தால் தோன்றும் உருவெளித் தோற்றமேயாகும்" என்றாள். ஆயின் யான் கண்டது சரி. "நீ இராமனிவனென்றனையே, இதன் காரண மென்ன" என வினவ, "இராமன் என் மூக்கையறுத்து மானபங்கஞ் செய்ததுமுதல் அச்சம் அதிகரித்தமையால் எனக்கு எங்குபார்த்தாலும் இராமன் வடிவமே காணப்படுகின்றது" என்றாள்.

"பொய்ந்நின்ற நெஞ்சிற் கொடியாள் புகுந்தாளைநோக்கி, நெய்ந்நின்ற கூர்வாளவனேருற நோக்கு நங்காய், மைந்நின்ற வாட்கண் மயில்நின்றென வந்தென் முன்னர், இந்நின்றவ ளாங்கொல் இயம்பிய சீதை யென்றான்.

செந்தாமரைக் கண்ணொடுஞ் செங்கனி வாயினோடும், சந்தார் தடந் தோளொடுந் தாழ்தடக் கைகளோடும், அந்தாரக லத்தொடும் அஞ்சனக்குன்ற மென்ன, வந்தானிவ னாகுமவ் வல்வில் இராமன் என்றாள்.

பெண்பாலுரு நானிது கண்டது பேதை நீயீண், டென்பாலும் இலாதவொ ராணுரு என்றி என்னே!, கண்பாலுறும் மாயை கவற்றுதல்கற்ற நம்மை, மண்பாலவ ரேகொல் விளைப்பவர் மாயையென்றான்.
ஊன்றும்முணர் வப்புற மொன்றினு மோடலின்றி, ஆன்றும்முள தாநெடி தாசை கனற்ற நின்றாய்க், கேன்றுன்னெதி பேசிழி நோக்கும் இடங்கள் தோறும், தோன்றும் அனையாள் இது சொன்னெறித் தாகும் என்றாள்,

அன்னாளது கூற அரக்கனும் அன்னதாக நின்னால் அவ்விராமனைக் காண்குறும் நீரென் என்றான், எந்நாள் அவன் என்னைத் தீர்வறும் இன்னல் செய்தான், அந்நாள் முதல்யானும் அயர்ந்திலன் ஆகும் என்றாள்''

ஆ ஆ! மனத்திற்கு எவ்வளவு வன்மை யிருக்கின்றது? ஒருவனுயிர்க்கு நன்மை செய்வதுங் கேடு செய்வதும் இம்மனத்தையன்றிப் பிறிதொன்றுண்டோ? மனம் யாதானும் ஒன்றை ஊன்றி நினைக்குமாயின் நினைக்கின்ற தான் வேறு நினைக்கப்படு பொருள் வேறு என்பதின்றித் தானே அதுவாய்விடுகின்றது. இக்கருத்தையே இராவணன் சீதையை நினைத்து மோகித்த சமையத்தில் அவனது நிலையைக் கூறவந்த கம்பநாடர்

"சிற்றிடைச் சீதையென்னும் நாமமுஞ் சிந்தை தானும், உற்றிரண் டொன்றாய் நின்றால் ஒன்றொழித் தொன்றை யுன்ன, மற்றொரு மனமும் உண்டோ மறக்கலாம் வருமற்றியாதோ, கற்றனர் ஞானம் இன்றேல் காமத்தைக் கடக்கவாமோ" எனக் கூறியிருக்கின்றார்.

இஃதென்னே! செய்யுளிலக்கணம் கற்கப்புக்க மாணாக்கனொருவன் அதே சிந்தனையாக உருப்போட்டுக் கற்றுவருங்கால் அவனுக்கு உணவு படைத்த அன்னை நெய்யூற்றுதற்கு மறதியால் வேப்பெண்ணெயை எடுத்து ஊற்றினளாக, அவன் சிந்தனை படிப்பிலேயே [illegible]

பட்டிருந்தமையால் கசப்பறியாது வழக்கப்படி யுண்டு சென்றான். அன்னையோ தான் மறதியால் வேப்ப நெய்யை யூற்றியதையும், மகன் படிப்பிற் கொண்ட காதல் மிகுதியாற் கைப்பறியாது புசித் தகன்றா னென்பதையுங் கருதி இவனுக்குப் படிப்பில் எத்தனைகாலம் இந்த ஊக்க மிருக்கின்ற தென்பதை யறிந்துகொள்ளும் பொருட்டுத் தின மும் நிம்பதைலத்தையே சோற்றிற் பெய்துவந்தனள். இங்ஙனஞ் சிலநாட் சென்றபின் யாப்பிலக்கண பாடம் படித்து முடிந்தவுடன் மைந்தன் மனம் முன்னிருந்த நிலையைவிட்டுத் திரும்பிற்று. அன்று வந்து வழக்கப்படி உண்ணும்போது "தாயே நெய் கசக்கின்றதே" என்றான். தாயுமதுகேட்டுக் "குழந்தாய்! இன்றுதான் உனக்குப் படிப்புங் கசந்ததுபோலும்" எனப் பகர்ந்தனள். பின்னர் அன்னை தான் செய்துவந்ததைக் கூற, மைந்தன் தான் காரிகை நூற்பாடந் தொடங்கிக் கவலையுடன் கற்று முடித்தமையைக் கூற, இருவரும் மகிழ்ந்தனர் எனக் கர்ண பரம்பரையிற் கூறுங் கதையை நோக்கினும் மனத்தைப்பற்றி மேலே கூறிப் போந்தவை யனைத்தும மெய்ம்மை யென்பது தெள்ளிதாமன்றோ?

இந்த மனம் என்னும் யானையானது காமாதிமதங்கொண்டு, பிர பஞ்சக் காட்டிற் புக்கு, அறுவகைத் தருக்களை பொடித்து, துயரக் கடலில் ஆழ்ந்து கெடாதபடி அறிவென்னும் அங்குசத்தாலடக்கி, நல் லொழுக்க மென்னும் பாசத்தாற் பிணித்துத்தியானம் என்னுங்கூடத் தில் நிறுத்தினால், அருளென்னுந் தெண்ணீர்பருகி இன்புறுதற் குரிய தாகும். இங்ஙனஞ் செய்வித்தல் ஞான மென்னும் பாகனதுகடமை பாகனாகிய ஞானம் தன் கடமையைச் செய்யாவழி மதம் பொழியும் யானை தன் பாகனைக் கொன்று தொலைத்தல் போலவே மனமுந் தன் பாகனாகிய ஞானத்தைக் கொன்றுவிடுதல் ஒருதலை.

மனத்தை யடக்குவதென்றால் சுலபமான காரியமன்று. அது கல்லினுங் கடிது; கல்லைச் சுற்றுளியால் எவருந் தகர்த்து விடலாம்! இதனைத் தகர்த்தல் அரிது. காற்றினுங்கடிது; வாயுவேகமெனக் கூறத்தக்க பிரசித்திபெற்ற காற்றுப்பொதிய மலையிலிருந்து இமய மலைக்குச் செல்வதென்றால் சிலகாலஞ் செல்லும். மனமோ லோகாந் தரங்கட்குங் கால் நிமிஷத்திலும் முந்திச்செல்லும். தீயினுங்கொடி யது; தீயை நீரா லவித்துவிடலாம். கடற்குட் புகினும் அருவியிற்

ருயினும் மனத்தீயை அவித்தலியலாது. கடலினும் பெரிது; தோணி யின் றுணையால் யாவருங் கடலைக் கடத்தலமையும், இம்மனத்தைக் கடத்தல் மிக அரிது. யமனினும் அஞ்சத்தக்கது; யமன் நியதிபெற்ற ஒருகாலத்திற் கொல்வான். இப்பாவிமனமோ நிமிஷந்தோறுங்கொன் றுகொண்டிருக்கும். அம்மம்ம! இதன் செய்கையை உற்று நோக்கி ஞல் சாபாநுக்கிரஹ சீலர்களும் நடுநடுங்கி அங்கங் குலைவரன்றோ "சிந்தையை யடக்கியே சும்மாவிருக்கின்ற திறமரிது" என்றார் தாயு மானவரும்.

முற்பிறப்பிலே நாம்செய்த புண்ணிய பாவங்களெல்லாம் இப் பிறப்பிலே நாமனுபவிக்குஞ் சுகதுக்கங்களாக வந்து பரிணமிக்கின் றன. இப்பிறப்பிற் செய்யும் நன்மை தீமைகள் இனிவரும் பிறப் பிற்கு வித்தாகி அப்போது நமது சுகாசுகங்க ளாகின்றன. ஆகவே நன்மை தீமை யிரண்டும் பொன்விலங்கும் இரும்புவிலங்கும் போற் பந்தித்து நிற்பனவேயாகும். ஆகவே இருவினைப் பற்றையும் ஒழி த்து 'என்கடன் பணிசெய்து கிடப்பதே" எனவும், "கூடும் அன்பி னிற் கும்பிடலேயன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" என வும், அருட்பெருந்தகையாளர் கட்டளை யிட்டருளியவாறு எவ்வித இன்பங்களையும் விரும்பாது சிவபிரான் திருவடிமலர்களையே சிந்தனை செய்யவேண்டும். இச்சிந்தனைதான் பிறவிப்பிணிக்கு மருந்தாவது முழுமுதற்கடவுளுடன் இரண்டறக் கலப்பதாகிய சிவசாயுச்சியபதவி யைத்தருவது. ஒருவன் மரணந்தகாலத்தில் அவன் மனம் எதைப் பற்றுகின்றதோ அதுவே அவனுக்கு அடுத்த பிறப்பாக வந்துகூடும்.

ஆகலின் இறுதிக் காலத்தில் உலகப்பற்றில் மனம் புகாமல் சிவ பிரான் திருவடிமலர்களையே மெய்யன்புடன் சிந்தனைசெய்யவேண்டும் உள்ளநா ளுள்ளமட்டும் மாயாவலையிற் சிக்கிப் பந்திக்கப்பட்டு நின்று பண்ட பதார்த்த பெண்டு பிள்ளைகளிடத்தே பற்று மிகக்கொண்டு வாழ்ந்து, இறுதிக்காலத்தே திடீரென்று எல்லாப் பற்றையும் விட் டொழித்து இறைவன் திருவடிமலர்களைத் தியானிப்பதென்றால் முடி யத்தக்க தொன்றன்றே! பன்னாட்பழகிய வாசனைதானேமேலெழுந்து நிற்கும். மனைவி என்செய்வாள்? புத்திரனுக்கு விவாகமாகவில்லையே? வீடுகட்டி முடிக்கவில்லையே? யென்பனவாதிய பலவகைப் பந்தங்கள் வந்து சூழ்ந்து மனத்தைப் பிணித்துக்கொள்ளும். இந்தச் சமையத்

தில் இஞ்சிநின்ற குரங்குபோலப் பசபசவென்று விழித்து மதிமயங்கிக் கண்ணீர்வடித்து மெய் நடுநடுங்கிக் கைகால் சோர்ந்து வாய்புலர்வுற்று நெட்டுயிர்ப்பெய்தி விம்மிவிம்மித் தியங்குவதல்லது பரமகருணாநிதியாகிய சிவபிரான் திருவடி நீழலைச் சிந்தித்தல் சாத்தியமன்றே? ஆதலின் கடைக்காலத்திற் சிவத்தியானஞ் செய்தற்கு வழியாது? என்பதே இனி ஆராய்ச்சிக்குரிய விஷயமாயிற்று.

மரிப்பவன் மண்மாண்டு மனைவி மக்கள் பொன் பூமி முதலியவற்றைச் சிந்திப்பதற்கு என்ன காரணம்? மனத்துக்கும் அவைகட்கும் என்னசம்பந்தம்? எதனால்இச்சிந்தனை எழுகின்றது? என்று நீளநினையுமிடத்து மனமானது இப்பொருள்களுடன் பிறந்ததன்று, வளர்ந்ததுமன்று. பன்னாட்பழகிய பழக்கமேலீட்டால் வந்த பற்று மிகுதியேயொழிய வேறில்லை. மனம் எதனிடத்தே அடுத்தடுத்துப் பழகுகின்றதோ அதனிடத்தே பற்றுதல் மிக்கு அதன்மயமே யாகின்றது. ஆனதுபற்றி நாம் திடகாத்திரத்துட னிருக்கும்போதே உலகப்பற்றுக்களெல்லாவற்றையும் சிறுகச் சிறுகவிட்டு, விட்ட அளவிற் கேற்ப இறைவனிடத்தே பற்றுதலைச்செலுத்தி வருவோமாயின், நாளடைவில் எல்லாப்பற்றுக்களும் முற்றுமொழிந்து சிவத்தியானமே மேற்பட்டு நிலைபெறும். இத்தியானம் வேரூன்றித் தங்கப்பெற்றால் கள்ளக்காதலனிடத் தன்புகலந்து வைத்தொழுகும் உள்ளக்காரிகைபோல "எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப்பட்டாலும், முத்தர் மனமிருக்கு மோனத்தே" என்றவாறு எந்தத் தொழிலைச் செய்யுங்காலத்தும் ஈசுவரத்தியானமே முற்பட்டு நிற்பதாகும். நாம்உண்பன உடுப்பன யாவும் சிவார்ப்பணமாகவும், எல்லாம் இறைவன் செயலே யெனவுங் கடைப்பிடித்து, இன்ப மெய்தினும் துன்ப மெய்தினுஞ் சிவா! என்ற மெய்ம்மொழியை மறவாது கூறி வரவேண்டும். இங்ஙனமே பழக்கத்திற் கொண்டுவந்து விட்டால் இறுதிக்காலத்தும் சிவசிந்தனையே நிலையுறுமென்பது நிச்சயம். இதனையல்லாது வேறு எவ்வித உபாயங்களும் இத்துணைப் பயனுதவுவதன்று. அவாவே பிறவிக்கேது என்பதை "அவா வென்பவெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றுந், தவா அப்பிறப்பீனும் வித்து" என்னுந் திருவள்ளுவனாரும், இறுதிக்கட் போதருஞ்சிந்தனை அடுத்துவரு பிறப்பாகு மென்பதையும், அப்போது ஈசுவரத்தியானம் வருதற்பொருட்டு எப்போதும் அத்தியானத்திலேயே பழகிவரவேண்டு மென்பதையும்,

"மரிக்கும்போ துன்னும் வடிவினை யாவி
பரிக்கும் நினைவு பரித்து.

ஆதலினாற் சுற்றத் தவரைநினை யாதபலன்
பாக நினைக பரிந்து." என்னுஞ் சோமவார விரதகற்
பத்தானும்;

"நின்று மிருந்துங் கிடந்து நடந்துநினை
என்றுஞ் சிவன்றா ளிணை." என்னும் வருத்தமறவுய்
யும் வழியானும்;

"உடம்பி னீங்குங்காலத்து அதனால் யாதொன்று பாவிக்கப்பட்டது அஃது அதுவாய்த் தோன்றுமென்பது எல்லா ஆகமங்கட்கும் துணிபாதலின், வீடெய்துவார்க்கு அக்காலத்துப் பிறப்பிற்கேதுவாய பாவனை கெடுதற்பொருட்டுக் கேவலப்பொருளையே பாவித்தல் வேண்டும். அதனால் அதனை முன்னே பாவித்தலாய இதனின் மிக்கவுபாயமில்லை யென்பதறிக" என்னும் பரிமேலழகர் கருத்து முதலியவற்றானும் நன்கு தெளியலாம்.

"அழுக்கு மெய்கொடுன் றிருவடி யடைந்தே
னதுவு நான்படப் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வ ரடிகேள்
பிழைப்ப னாகிலுந் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினுந் திருப்பெய ரல்லான்
மற்று நானறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க வென்கணுக் கோர்மருந் துரையா
யொற்றி யூரெனு மூருறை வானே."

"அங்கத்தை மண்ணுக் காக்கி யார்வத்தை யுனக்கே தந்து, பங்கத்தைப் போகமாற்றிப் பாவித்தேன் பரமா வுன்னைச், சங்கொத்த மேனிச்செல்வா சாதல்நாள் நாயேன் உன்னை, எங்குற்றா யென்றபோதில் இங்குற்றேன் என் கண்டாயே." என்னுந் திருநாவுக்கரசுநாயனார் திருவாக்கும் மேற்கூறிப் போந்தவற்றையே வலியுறுத்து வனவாமென்க.

இதுகாறுங் கூறிப்போந்த உண்மையைக்கொண்டு எக்காலத்தும் சிவத்தியானத்தை மறவாது பயின்று வருவோமாயின் "பழக்கங் கொடியது பார் பாறையையுங் கோழி கிழக்கும்" என்றாங்கு எச் சமையத்துஞ் சிவா என்ற மெய்ம்மொழியே நாவிற் பதிந்து மேவிடும். "நற்றவாவுனை நான் மறக்கினுஞ் சொல்லு நாநமச்சிவாயவே" என்ற வண்ணம் பயிற்சிபண்ணிக்கொண்டால் எல்லாப் பேறும் எய்தல் எளிதாம். ஆதலின், சிவாய நமவென்ன சிந்தித் திருப்பார்க்கபாய மொரு நாளு மில்லை" என்ற முதுமொழியையே பின்பற்றவேண்டும்.

அங்ஙனஞ் சிவத்தியானஞ் செய்து வருவோமாயின் எல்லாப் பொருள் நம்மிடம் தயிரினுள் நெய்போல் வெளிப்பட்டு நின்று உண்ணப்படுவனவாகிய உண்டிப்பொருள்களானும், அனுபவிக்கப்பெறும் மனைவி முதலியோரானும் யாவரும் வணங்கத்தக்கதாகிய அரசாட்சியாயினும், அடையும் இன்பத்தினுஞ் சிறந்ததொரு நல்லின்பத்தையே நாளும் நல்கி வினைக்கீடாய் யாக்கையொழிவில் முத்திப்பேரின்பத்தையுந் தந்து வாழ்வித்தல் ஒருதலை யென்க இதனாலன்றோ?

"கனியினுங் கட்டிபட்ட கரும்பினும்
பனி மலர்க்குழற் பாவைநல் லாரினும்
தனி முடிகவித் தாளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே"

என்றார் திருநாவுக்கரசு நாயனார்.

சங்கராசாரியசுவாமிகள் சிவபிரானைப் பிரார்த்திக்கு மோரிடத்தில் "சுவாமீ! அடியேன் மனங்குரங்காயிருக்கின்றது. இதனால் எனக்குச் சிறிதும் நன்மையில்லை. தேவரீரோ பிக்ஷாடன மூர்த்தியாகிக் கையில் ஓடெடுத்துத் திரிபவராதலால் இக்குரங்கைத் தேவரீரே என்று கொள்ளவேண்டும் பிச்சை புகுபவர் குரங்கைக் கைக்கொண்டு சென்றால் எளிதிற் பிச்சை கிட்டும். ஆதலின் தேவரீருக்கே ஏற்றதாகும்" என்று இக்கருத்தையே நன்கு விஸ்தரித்துக் கூறியிருத்தலும் நோக்கத் தக்கதாம். இதனால் மனத்தைச் சிவபிரானிடத்தே சேர்க்க வேண்டுமென்ற ரகஸ்யமும், அது மிகவும் அருமையாதலின் "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்றவண்ணம் இறைவன்

திருவருளாற்றான் கிடைப்பதாகும் என்றவுண்மையும் விளங்கப்பெற்றிருத்தல் மிகவும் பாராட்டற்பாலதொன்றேயாம்.

மனமானது அறிவின் வசப்பட்டு நிற்குமாயின் அதைவிடப் பெறும் பேறு பிறிதொன்றில்லை. தற்காலம் மேனாட்டுக் கலைஞர்கள் மெஸ்மரிசம், என்று சொல்வதெல்லாம் தம் மனத்தைத் தாம் வசப்படுத்திக்கொண்டு தாம் மனத்துக்கு அடிமையாகாமல் நடக்குஞ் சிறந்த முறையேயாகும். நமது முன்னோர் கருடபாவனை என்று கூறுவதைக் கேட்டிருக்கின்றோமே, அதுதான் யாது? ஒருவனுக்கு விடந்தீண்டியவழி அதைத் தீர்க்கப் புக்க மாந்திரீகன் தன் ஆன்மாவைக் கருடனுக்கு அதிதெய்வமாகிநிற்கும் மந்திர மூர்த்தியாகப் பாவித்துச் செபித்தலேயாகும். அங்ஙனஞ் செபித்தலாலே விடந்தீர்ந்து சுகமிறுதல் பிரயத்திட்சமாம். இதனாலும் நாமறியக் கிடக்கின்றது மனத்தின் பாவனாசத்தி விசேடமே யன்றோ? சிவோகம்பாவனை செய்துவருஞ் சீவன்முத்தர்கள் சிவமாந்தன்மைப் பெருவாழ் வெய்துதலை நூல்வாயிலாக அறிகின்றோம் சிவத்தினிடத்தே மனத்தைச் செலுத்தி நிற்கும் பெரியாரவார் முப்பத்தாறு கருவிகளுங் கழன்று அருளிடத்தே நின்று ஞேயத் தழுந்துவதாகிய சாக்கிராதீதா வஸ்தையுடையராய் விதிவிலக்கின்றிச் செய்வன வெல்லாந் தவமாகக்கொண் டொழுகுதலும், விழித்த கண்ணினராயும் புறப்பொருள்களைப் பற்றப்பெறாதலும் எதனால் எனின் அவர்கள் மனம் இறைவனிடத்திற் பின்னிக் கலந்து பிணிப்புண்டுகிடத்தலால் வேறொன்றிற் செல்லற்கிடனின்றி மனமிறந்து நிற்றலுற்றமையாலே யென்க.

"ஒழித்த கோன்பின ராடலர் பாடலருலகம், பழித்த செய்கையராழுகையர் நகையினர் பாசங், கழித்த கண்களா லானருக் கண்டு கொண்டுலகில், விழித்த கண்குருடாய்த் திரிவீரும் பலரால்" என்பதாதியாக வரும் பெரியார் திருவாக்குக்களால் இதனுண்மையறியத் தகும்.

"சினமிறக்கக் கற்றாலுஞ் சித்தியெலாம் பெற்றாலும், மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே"

தின்னை யறப்பெறுகிற்கிலே னன்னெஞ்சே
பின்னையான் யாவைப் பெறுகிற்பேன்-பின்னை
யறப்பெறுகிற்பேனேற் பெற்றேன்மற்றீண்டு
துறக்கந் திறப்பதோர் தாள்.

உள்ளூரிருந்துந்தம் முள்ளமறப் பெற்றாரேற்
கள்ளவிழ் சோலையாங் காட்டுள்ளார்-காட்டுள்ளும்
உள்ள மறப்பெறு கல்லாரே ளுட்டுள்ளு
நண்ணி நடிவூருளார்." என்பனவாதியாகமனத்தை வசப் படுத்துவதன் சிறப்பைப்பற்றி நம்முதியோர் கூறிவை த்தஅற்புதச் செயுட்கள் பலவுண்டு. அவற்றையெல்லாம் விரிப்பிற்பெருகும்.

இதுகாறுங் கூறிப்போந்த வண்ணம் இடையறாப் பேரன்பு கொண்டு சிவத்தியானஞ் செய்து வரும்பொருட்டு வேண்டுவார் வேண்டுவதே யீயும் பரமகருணாநிதியாகிய முழுமுதற்கடவுள் முன்னின்று திருவருள் சுரந்து காத்தருள்க.

வியாசத்திரட்டு.